**CC 119/2009 Dt: 23.03.2023** **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.25**

**அ.சா.9 மெய்ஞானம், த.பெ. சதாசிவம் மீண்டும் அழைக்கப்பட்டு 2, 3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கில் 5 நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் பட்டியல் சாட்சி ராஜேந்திரன், முகமது ப்ரூக், முகமது இஸ்மாயில் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவர்களை தவிர வேறு சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை நான் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கின் சாராம்சம் எதிரியால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டதாக பொய்யான முத்திரையிட்டு ஆவணங்களை தயார் செய்தது ஆகும் என்றால் சரிதான். முகமது இஸ்மாயில் சம்பவசமயத்தில் பணியில் இருந்தாரா என்று நான் விசாரித்தேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் சம்பந்தபட்ட இடங்கள் வக்பு வாரியத்திற்கு சொந்தமானது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகளை நான் விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் நானும் எனது பின்னால் வந்த புலன் விசாரணை அதிகாரிகள் சரிவர விசாரிக்காமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.